பொருளடக்கம்

இறைவனை நம்பினாலே இறைநம்பிக்கையா? 7

இறைவனைத் தெரிந்தாலே இறைநம்பிக்கையா? 9

ஒரு கடிதம் படிக்கப் போகிறீர்கள்... 11

முஸ்லிம் எழுதிய கடிதம் - 1 12

- முஸ்லிமுக்கு நண்பர் எழுதிய கடிதம் 19

அல்லாஹ்வைப் பற்றி முஸ்லிம் அனுப்பிய கொரியர் - 2 20

- நண்பர் அனுப்பிய முதல் மின்னஞ்சல் 31

அல்லாஹ்வின் தன்மைகள் குறித்து முஸ்லிம் அனுப்பிய பதில் மெயில் - 3 33

- நண்பர் அனுப்பிய பதில் 41

'நான் நாத்திகன் ஏன்?' புத்தகம் குறித்து முஸ்லிம் அனுப்பிய பதில் மெயில் - 4 43

- நாத்திகர்கள் குறித்த மின்னஞ்சலுக்கு நண்பர் அனுப்பிய பதில் 127

இயேசுவைப் பற்றியும் இன்னும் பல நம்பிக்கைகள் பற்றியும் முஸ்லிம் அனுப்பிய பதில் - 5 130

- நண்பர் அனுப்பிய பதில் 178

அவதார நம்பிக்கைகள் குறித்து முஸ்லிம் அனுப்பிய பதில் மெயில் - 6 180

- நண்பர் அனுப்பிய பதில் 196

பக்தி யோகம் நூலுக்கு மறுப்பளித்து முஸ்லிம் அனுப்பிய மெயில் - 7 198

இழிவான பக்திகளும் உயர்வான பயபக்தியும் என்ற தலைப்பிட்ட மறுப்புக் கட்டுரை 200

- நண்பர் அனுப்பிய பதில் 216

இறைவனின் தோற்றம் குறித்து முஸ்லிம் அனுப்பிய மெயில் - 8 217

- நண்பர் அனுப்பிய பதில் 243

இறைவனை நம்பினாலே இறைநம்பிக்கையா?



‘எனக்கு இறைநம்பிக்கை உண்டு’ என்கிறார் ஒருவர். நீங்கள் அவரை எப்படிப் புரிந்துகொள்வீர்கள்?

‘அவர் ஒரு நாத்திகர் அல்லர். இறைவன் உண்டு என்பவர். இறைவனைப் பார்க்காவிட்டாலும் இறைவன் உண்டு என்பதில் சந்தேகப்படாதவர்.’ இப்படித்தானே?

இறைவன் அப்படிப்பட்டவன், இப்படிப்பட்டவன், அவனுடைய தன்மை அது, இது என்று என்னென்னவோ ஒருவர் சொல்கிறார். இப்படியெல்லாம் நம்புங்கள் என்கிறார் நம்மிடம். இப்போது கேள்வி என்னவென்றால், அவர் சொல்கிறபடி நம்பினால் இறைநம்பிக்கை ஆகிவிடுமா?

உலகில் அதிகமானவர்கள் இப்படித்தான் இறைநம்பிக்கைக்கு அளவுகோள் வைத்திருக்கிறார்கள். இறைவன் பெயரில் யார் எதைச் சொன்னாலும் அதை நம்பிக்கொண்டு போவது எப்படி இறைநம்பிக்கை ஆகிவிடும்?

எப்படி நம்புவதும் இறைநம்பிக்கைதான் என்றால் இறைவனுக்கு என்னதான் மரியாதை! இறைவனின் உயர்வையும் கண்ணியத்தையும் இந்தப் போக்கு மதிக்கிறதா? உங்கள் இறைநம்பிக்கையை எது முடிவு செய்கிறது? உங்களை யாரும் எதுவும் சொல்லலாம், உங்களை எப்படி வேண்டுமானாலும் வருணிக்கலாம், அது உண்மையோ, பொய்யோ, நீங்கள் அமைதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இது உங்களுக்குச் சம்மதமா?

‘அதெப்படி, வாயில் வந்தவாறெல்லாம் என்னைப் பற்றி யார் எது சொன்னாலும், நான் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டுமா? எப்படி நியாயம்? என்னால் சகிக்கவே முடியாது. உண்மைக்குப் புறம்பாக என்னைப் பற்றிப் பேசுவது, அவதூறு. என்னை அப்படிப் பேசியவர்கள்மீது வழக்குப் போடுவேன்.’ சொல்வீர்களா இல்லையா?

ஆனால், இறைவனைப் பற்றி யார் எது சொன்னாலும், வாயை மூடிக்கொண்டு அப்படியே நம்புகிறீர்களே, ஏன்? என்ன, இறைவனைப் பற்றி எந்தச் செய்தி வந்தாலும், அது நூறு சதம் உண்மைதான் என்ற நினைப்பா? அது எப்படி??

வெளிப்படையாகப் பேசுவோம். ஆரோக்கியமான கலந்துரையாடல் நல்ல முடிவுகளைக் கொண்டு வரும். உண்மைகள் தெளிவாகும்.

இப்போது ஓர் உண்மை தெளிவாகிறது. இறைநம்பிக்கை எனக்கு உண்டு என்பவர்கள் எல்லாருமே இறைநம்பிக்கை உள்ளவர்கள் இல்லை. இறைவன் யார் என்று தெரிந்து, அவனை உண்மையாக, சரியாக நம்புகிறவர்கள்தாம் இறைநம்பிக்கை உள்ளவர்கள்.

இன்னொரு விசயம்...

ஒரு கடிதம் படிக்கப் போகிறீர்கள்...

✿

ஒரு முஸ்லிம் தம் நண்பருக்கு எழுதிய கடிதம். அந்த நண்பர் முஸ்லிமில்லை. ஆனால், நண்பர். கொரியர் சர்வீஸ்மேன் கடிதத்தைக் கொடுக்கிறார். கையெழுத்து வாங்கிக்கொண்டார். நண்பர் எதிர்பார்த்ததுபோல் அவருடைய முஸ்லிம் நண்பர் அனுப்பிய கடிதம்தான் அது. ஆவல் பிறக்கிறது என்ன எழுதியிருக்கிறாரோ என்று. ஏனென்றால், கடைசியாக இவர் போட்ட கடிதத்தில் அவரிடம் ஒரு கேள்வி கேட்டிருந்தார். அது அவரைச் சீண்டியிருக்குமோ என்ற பயமும், 'இல்லை இல்லை, அவர் தெளிவானவர்; வெளிப்படையானவர். பதில் சொல்வார். தப்பாக எடுத்துக் கொள்ளமாட்டார்' என்ற சமாதானமும் இவரின் மனசுக்குள் ஓடுகிறது.

'உங்களிடம் ஒன்று கேட்கலாமா? நீங்கள் ஏன் உங்களை முஸ்லிம் என்று சொல்லிக்கொள்கிறீர்கள்?'

இந்தக் கேள்விக்கு அவர் பதில் எழுதியிருக்கிறார். என்ன சொல்லியிருப்பார்? சுவாரசியம் தொற்றிக்கொண்டது.

அவரின் கடிதத்தைப் பிரித்துப் படிக்கிறார் இவர்.

முஸ்லிம் எழுதிய கடிதம் – 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால்...

என் இனிய நண்பருக்கு,

உங்கள் கேள்வி வெளிப்படையானது. உங்கள் அணுகுமுறை எனக்குப் பிடித்திருந்தது. இம்மாதிரி ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொண்டாலே நிறைய பிரச்சினைகள் ஒழிந்துவிடும். நான் என்னை ஏன் முஸ்லிம் என்று சொல்லிக்கொள்கிறேன் என்றுகேட்டிருக்கிறீர் கள். இந்தக் கேள்வி எனக்குப் பெரிய சந்தோஷத்தை வாரி வழங்கிவிட்டது. ஏன் தெரியுமா?

இப்படிக் கேட்டதின் மூலம் என் நட்பை மதித்திருக்கிறீர்கள். என்னிடம் நெருங்கியிருக்கிறீர்கள். 'உங்களைக் கொஞ்சம் புரிந்து கொள்ள விரும்புகிறேன். எனக்கொரு பதில் தேவை' என்று என்மீது உரிமை கொண்டாடியிருக்கிறீர்கள். இதில் எனக்குச் சந்தோஷம்.

உங்களிடம் நான் திரும்பப் பேசுவதற்கும், என்னிடம் திரும்பத் திரும்ப நீங்கள் பேசுவதற்கும், கடிதம் பரிமாறுவதற்கும் உங்கள் கேள்வி அடையாளமாக இருக்கிறது. நாம் ஒருத்தரை ஒருத்தர் முறைத்துக் கொள்ளாதவர்கள் என்பதற்கு இது ஆதாரமாகிவிட்டது. நான் உங்களிடம் நல்ல விதத்தில் பழகுகிறேன் என்பதை இது உறுதிசெய்கிறது. இதனாலும் எனக்குச் சந்தோஷம்.

நான் ஏன் முஸ்லிமாக இருக்கிறேன் என்கிற கேள்வி உங்களுக்கு மட்டுமல்ல, எனக்கும் முக்கியமானது. எப்படியெனில், முஸ்லிமாக இருப்பதற்குக் காரணம் தெரியாமல், யாரும் முஸ்லிமாக இருக்க முடியாது. நான் முஸ்லிமாக இருக்கிறேன். அதற்குக் காரணமும் இருக்கிறது. அதற்கான அடிப்படை அறிவும் என்னிடம் இருக்கிறது. முஸ்லிமாக இருப்பதற்கு எதைத் தெரிந்திருக்க வேண்டுமோ, அதை நான் தெரிந்திருக்கிறேனா என்று எனக்கு நானே சோதித்துக் கொள்ள உங்கள் கேள்வி உதவியது. இதுவும் என் சந்தோஷத்திற் குக் காரணம்.

நான் ஒரு முஸ்லிம் என்று சொல்லிக்கொள்வது என் இறை நம்பிக்கையின் முக்கிய அடையாளம். என்னைப் போன்றவருக்கு இது ஒரு பெயர் மட்டுமல்ல, ஓர் அந்தஸ்து; பெரும்பேறு; இறையருள்; பெரும் செல்வம். இது குறித்து உங்களிடம் பேசவும், பகிர்ந்துகொள்ளவும் எனக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

وَمَنْ أَحْسَنُ قَوْلًا مِمَّنْ دَعَا إِلَى اللَّهِ وَعَمِلَ صَالِحًا وَقَالَ إِنَّنِي مِنَ الْمُسْلِمِينَ

யார் அல்லாஹ்வின் பக்கம் அழைத்து, நற்செயல்களைச் செய்து, 'நிச்சயமாக நான் முஸ்லிம்களில் ஒருவன்' என்கிறாரோ, அவரை விட அழகான வார்த்தை சொல்பவர் உண்டா? (குர்ஆன் 41:33)

என்று புகழ்ந்து பேசுகிறது திருக்குர்ஆன்.

முஸ்லிம் அடையாளம் மதவாதம் அல்ல

'உங்களை முஸ்லிம் என்று அழைத்துக்கொள்வதில் இவ்வளவு சந்தோஷம் என்றால், இது இனவெறிதானே?' நீங்கள் கேட்கலாம்.

இனவெறி என்பது பிறப்பால் வருவது. நியாயம், அநியாயம் பார்க்காமல் கண்மூடித்தனமாக தன் இனத்தவர்களை ஆதரிப்பது தான் இனவெறி. இது மொழிக்காக வந்தால், மொழிவெறி. சாதிக்காக வந்தால், சாதிவெறி. தேசத்திற்காக வந்தால், தேசவெறி. நிறத்துக்காக வந்தால், நிறவெறி.

மொழியால், சாதியால், தேசத்தால், நிறத்தால் தங்களுக்கு மாற்றமான மக்களுக்கு அநியாயம் செய்வதை நியாயப்படுத்துவதே இனவெறி. மறுக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன். இப்போது முஸ்லிம் என்ற பெயருக்கு வருகிறேன்.

முஸ்லிம் என்றால் கட்டுப்பட்டவர், கீழ்ப்படிந்தவர் என்று அர்த்தம். யாருக்குக் கட்டுப்பட்டவர்? அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவர். அதாவது, அல்லாஹ்வையே வணங்கி அவனுக்குக் கட்டுப்பட்டவர்தாம் முஸ்லிம். விசயம் எளிதானது. தன்னை முஸ்லிம் என்று சொல்லிக்கொள்பவர், தான் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவர் என்று மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறார். இது இனவெறி அல்ல; விசுவாசப் பிரகடனம்.

மொழியால், சாதியால், தேசத்தால், நிறத்தால் வித்தியாசப்பட்டவர்கள் கூட, இறைவன் ஒருவனுக்குக் கட்டுப்பட்டு அவனுடைய இஸ்லாமியச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தால், அவரை

அல்லாஹ்வைப் பற்றி முஸ்லிம் அனுப்பிய கொரியர் – 2

✿

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால்...

என் இனிய நண்பருக்கு,

நலம். நலமறிய ஆவல். லேப்டாப் வாங்கப் போகிறீர்களா? சந்தோஷம். வாழ்த்துகள். நமக்குள் மின்னஞ்சல் பரிமாற்றம் இருந்தால், செய்திகளை உடனுக்குடன் பரிமாற முடியும். எனது மின்னஞ்சல் முகவரி இதுதான்: *muslimiswaiting@gmail.com*

ஆமாம், நான் உங்கள் மின்னஞ்சலுக்காகக் காத்திருக்கிறேன். அனுப்புங்கள். இன்ஷா அல்லாஹ் அடுத்த கடிதங்களை மின்னஞ்சலில் பரிமாறலாம். (நீங்கள் இன்ஷா அல்லாஹ் சொல்வதில் ஒரு தப்பும் இல்லை. அதற்கு அர்த்தம், அல்லாஹ் நாடினால் என்பது. அவன் நாடாத வரை எதுவும் நாம் செய்துவிட முடியாது. அவனுடைய உதவியைப் பிரார்த்திக்கும் வார்த்தைதான் இது. உங்களுக்கும் எனக்கும் அல்லாஹ்வின் உதவி தேவைதான்.)

அப்புறம் உங்கள் கேள்விக்கு வருகிறேன். அல்லாஹ்வைப் பற்றி கேட்டிருந்தீர்கள். கேட்டதில் தப்பில்லை. பதில் சொல்வது என்கடமை. அதற்கு முன்பு ஒரு முக்கியக் கேள்விக்கு நான் பதில் சொல்லிவிட வேண்டும். அதுவும் உங்கள் கேள்வியில் இருந்தது.

உங்கள் கடிதத்தில் ஆரம்பத்தில் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால் என்று எழுதுகிறீர்கள். அவருக்கும் நம்மைப்போல் பெயர் உண்டா? உங்களுக்கு யார் சொன்னது அல்லாஹ்வின் பெயரை என்று கேட்டிருந்தீர்கள்.

இந்தக் கேள்வி மிக முக்கியமானது. உங்களுக்கு அல்லாஹ்வைப் பற்றி நான் சொல்கிறேன். எனக்கு யார் சொன்னது? எனக்குச் சொன்னவருக்கு யார் சொன்னது? அவருக்கு யார் சொன்னது? அவருக்கு யார் சொன்னது? — இதைத் தெரிந்துகொள்வது

அவசியம்தான். ஏன் தெரியுமா? எதையும் ஆதாரப்பூர்வமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இறைவனைப் பற்றி யார் எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்கிற மனப்போக்கு நம்மிடம் இருக்கவே கூடாது.

உண்மையில் உங்கள் கேள்வி ஆழமானது. அல்லாஹ்வின் பெயரை அல்லாஹ் சொல்லாத வரை யாருக்கும் தெரிய சாத்தியமே இல்லை. நம்முடைய பெயரை நம்மைப் பெற்றவர்கள் சொல்லித் தெரிந்துகொண்டோம். அல்லாஹ்வுக்குத் தாய் தந்தை இல்லை. குமாரன் குமாரத்தியும் இல்லை. அவனுக்கு யாரும் பெயர் சூட்டிவிட முடியாது. அவனுக்கு இதுதான் பெயர் என்று அவனே சொன்னால்தான் நாம் அறிய முடியும். அவன் யாரிடம் சொன்னான், உங்களுக்கு எப்படித் தெரிய வந்தது என்ற தொனியில் கேட்டிருக்கிறீர்கள்.

திருக்குர்ஆனும் நபிவழியுமே முஸ்லிமுக்கு ஆதாரம்

சொல்கிறேன். எனக்கு அல்லாஹ்வைப் பற்றித் தெரிய வந்தது, திருக்குர்ஆன் வழியாக.

திருக்குர்ஆன், அல்லாஹ்வின் இறுதி வேதம். அவனுடைய தூய வார்த்தைகள். உலக மக்கள் எல்லாருக்கும் தன்னைப் பற்றி விவரிக்க குர்ஆனை இறக்கினான் அல்லாஹ். அதைப் படித்தேன். தெரிந்துகொண்டேன்.

அடுத்து, திருக்குர்ஆனைத் தெளிவாக விளக்கிய முஹம்மது நபிகளார் ﷺ அவர்களின் உபதேசங்களையும் வாழ்க்கையையும் படித்தேன். அதிலும் அல்லாஹ்வைப் பற்றித் தெரிந்துகொண்டேன்.

இந்த இரண்டு வழிகளில் மட்டுமே அல்லாஹ்வைப் பற்றி நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும். என் நம்பிக்கைகளை முடிவு செய்வது குர்ஆனும் நபிகளாரின் விளக்கமும்தான். இந்த இரண்டு தூண்கள் மீதுதான் என் நம்பிக்கைகளின் அஸ்திவாரம் இருக்கிறது. இந்த இரண்டை விட்டு வேறு எதிலிருந்தும் என் நம்பிக்கைகள் உருவாகாது; உருவாக விடமாட்டேன். ஏனெனில், நான் ஒரு முஸ்லிம். அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவன்.

என் நம்பிக்கைகளை எனக்குச் சொல்லிக் கொடுக்கத் தகுதியானவர், முஹம்மது நபிகளார் ﷺ மட்டுமே என்று நம்புகிறேன். அவர் அல்லாஹ்வின் ஒரு தூதர். அவருக்குத் தகுதி இருக்கிறது

அல்லாஹ்வின் தன்மைகள் குறித்து முஸ்லிம் அனுப்பிய பதில் மெயில் – 3

✿

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால்...

என் இனிய நண்பருக்கு,

நான் உங்களுக்குப் பெரிய சிரமத்தைக் கொடுத்துவிட்டேன். தமிழை ஆங்கில லிபியில் டைப் செய்து உருமாற்றி அனுப்பினீர் களா? அது ஒரு தொல்லை அல்லவா? சிலநேரங்களில் பொருத்த மான எழுத்துகள் அதில் வராது. சிரமத்திற்கு வருந்துகிறேன். நீங்கள் விரும்பினால் பழையபடி கடிதமே அனுப்புங்கள். இல்லையென் றால், தமிழ் தட்டச்சு செய்யப் பழகிக்கொள்ளுங்கள். நான் அப்படித் தான் பழகினேன். ஆனால், இதற்காக டைப்பிங் இன்ஸ்டியூட்டுக்கு அலையத் தேவையில்லை. ஆசான் என்றொரு மென்பொருள் இருக்கிறது. கூகுளில் தேடுங்கள், இதன் லின்க் முதல் வரிசையில் வந்து நிற்கும். டவுன்லோட் செய்து அதில் தினசரி 15 நிமிடங்கள் பயிற்சி செய்தாலே போதும். இன்ஷா அல்லாஹ் அதிகபட்சம் 15 நாட்களில் சிறப்பாக டைப் செய்யப் பழகிக்கொள்வீர்கள்.

அல்லாஹ்வை ஏன் 'அவன்' என்கிறோம்?

அல்லாஹ்வை நான் அவன் என்று சொல்வது ஏன் என்று கேட்டி ருந்தீர்கள். இது ஒரு மொழிரீதியான விசயம். அவ்வளவுதான். அவனைப் பற்றிப் பேசும்போது நம்முடைய மனித மொழியில் பேசுகிறோம். இதற்காகத் தனியாக எந்த மொழியும் நம்மிடம் இல்லை. ஆண்பால், பெண்பால், பலர்பால் விகுதிகள் தமிழில் உள்ளன. அவன் என்பது ஆண்பால், அவள் என்பது பெண்பால், அவர் என்பது பலர்பால். ஆனால், அறபுமொழியில் பலர்பால் இல்லை. எப்படி ஆங்கிலமோ அப்படி. ஆங்கிலத்தில் **He, She** மட்டுமே உண்டு. 'அவர்' என்பதற்கு ஆங்கிலத்தில் தனி வார்த்தை இல்லைதானே?

விசயம் என்னவென்றால், அல்லாஹ்வைப் பற்றிய எந்த விசயத்திற்கும் அறபுமொழியைச் சார்ந்திருக்க வேண்டியது நம் நிலைமை. காரணம், அந்த மொழியில்தான் இறுதிவேதம் குர்ஆன் இறங்கியது. அதில் அல்லாஹ் தன்னை 'அவன்' என்றே குறிப்பிடுகிறான். அறபுகள் பேசிய மொழியிலும் 'அவர்' இல்லை. அதனால் வேறு வழியும் இல்லை. அவள் என்றும் சொல்ல முடியாது.

தமிழ் பேசும் முஸ்லிம்களைப் பொறுத்த வரை, 'அவன்' என்று சொல்வது இரண்டு காரணங்களால் அவசியம். ஒன்று, அல்லாஹ் தன்னை எந்த விதத்தில் குறிப்பிடுகிறானோ, அதை நேரடியாக மொழி பெயர்க்க முடிகிறது. இரண்டாவது, இது மரியாதைக்குறைவும் அல்ல. நம்மில் ஒருவரை ஒருவர் அழைக்கும்போதுதான் 'அவன்' என்பது மரியாதைக் குறைவைக் காட்டும். ஆனால், இறைவனைக் குறிப்பிடும்போது நிச்சயம் யாரும் அதில் மரியாதைக் குறைவைப் பார்க்கமாட்டார்கள். மாறாக, அதில் நெருக்கம் தெரியும். உரிமை கொண்டாடுவது வெளிப்படும். இறைவன், நாயன், ஆண்டவன், தேவன் என்றுகூட தமிழில் இறைவனைக் குறிப்பிடுகிறார்கள். இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தும் போதும் 'அவன்' என்ற ஆண்பால் விகுதியைத்தான் பயன்படுத்த வேண்டியதாகிறது. அதற்காக யாரும் இறைவனை மரியாதைக் குறைவாகப் பேசுவதாக நினைக்கிறார்களா? இல்லை என்று நீங்களே ஏற்றுக்கொள்வீர்கள்.

இதுதான் காரணம், நான் அல்லாஹ்வை 'அவன்' என்று குறிப்பிட்டதற்கு. இறைவன் ஆணாகவோ, பெண்ணாகவோ இருக்க மாட்டான் என்று நீங்களே உணர்வதாக எழுதியிருந்தீர்கள். சரியாகச் சொன்னீர்கள். உண்மைதான். இறைவன், மனிதல்ல. மற்ற படைப்புகளைப் போன்றவனும் அல்ல. படைப்புகளுக்குத்தான் ஆண், பெண் தன்மைகள் உண்டு. இறைவனோ படைப்பாளன். மிகப் பெரியவன். மிகவும் பரிசுத்தமானவன். அவன் ஆணாகவோ, பெண்ணாகவோ இல்லை.

ஒரு விசயத்தைக் கவனித்தீர்களா? இறைவன் ஆணாகவோ, பெண்ணாகவோ இருக்கமாட்டான் என்று தோன்றுகிறது என எழுதியிருந்தீர்கள். உங்களின் எண்ணம் எவ்வளவு சரியானது பாருங்கள். இந்த உள்ளுணர்வு உங்களையும் என்னையும் படைக்கும்போதே அல்லாஹ் நமக்குக் கொடுத்தது. நம்முடைய இயல்பு ஒருக்காலும் இறைவனை ஆணாகவோ, பெண்ணாகவோ கற்பனை செய்வதைச் சகிக்காது. அப்படி நம்புவதே நமக்கு விகாரமாகத்

‘நான் நாத்திகன் ஏன்?’ புத்தகம் குறித்து முஸ்லிம் அனுப்பிய பதில் மெயில் – 4

✿

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால்...

என் இனிய நண்பருக்கு,

அந்தப் புத்தகத்தை அவசரப்பட்டு அனுப்பிவிட்டீர்கள். என்னிடம் இருக்கிறது அது. தமிழில் 1934இல் வெளிவந்த அதை இன்றும் நாத்திகப் பதிப்பகங்கள் வெளியிட்டு வருகிறார்கள். அந்தக் காலத்தைவிட அறிவியல் வளர்ந்துவிட்ட இக்காலத்திலும் அதை வெளியிடுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நாத்திகர்கள் எந்தளவு அறிவியல் ஞானத்தை வளர்த்துக்கொள்ளாமல் இருக்கிறார்கள் என்பதற்கு இது ஆதாரம். ஏனெனில், பகத்சிங் தன் வாதங்களில் டார்வினின் பரிணாம வளர்ச்சித் தத்துவத்தையும் சொல்லிச் செல்கிறார். இந்தத் தத்துவம் காலாவதியான தத்துவம். இன்றைய அறிவியல் உலகம் இதைச் சுக்குநூறாக்கிவிட்டது. டி.என்.ஏ.வில் மனித வாழ்க்கையைப் படித்துக்கொண்டிருக்கிற இன்றைய விஞ்ஞான உலகில், இன்னும் பரிணாமத் தத்துவத்தைப் பேசுகிறவர்களைப் பார்க்கும்போது இவர்கள் எவ்வளவு பிற்போக்கான நம்பிக்கையில் இருக்கிறார்கள் என்று நினைத்துக்கொள்வேன்.

இவர்களும் ஒரு விதத்தில் நம்பிக்கையில்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள் ஆத்திகர்களைப் போல. பின்னென்ன? பரிணாமத் தத்துவம் விஞ்ஞானத்தால் நிருபிக்கப்படாதது. அறிவியலில் ஒன்று தியரியாக இருக்கிறது என்றாலே, அது நிரூபிக்கப்படாதது என்று அர்த்தம். அதை நாத்திகர்கள் தூக்கிப் பிடிப்பது அவர்களின் நம்பிக்கையைக் காட்டுகிறது, அவர்களின் பகுத்தறிவையோ ஆராய்ச்சி அறிவையோ அல்ல. உண்மையில் இவர்கள் இந்தத் தத்துவத்தைத் தூக்கிப் பிடிக்கும் ஒரே காரணம், கடவுள்தான் அனைத்தையும் படைத்தான் என்ற உண்மையை மறுக்கத்தான். வேறொன்றும் இல்லை.

இயேசுவைப் பற்றியும் இன்னும் பல நம்பிக்கைகள் பற்றியும் முஸ்லிம் அனுப்பிய பதில் – 5

✿

நண்பருக்கு,

அட்டாச்மென்ட்டை டவுன்லோடு செய்துகொள்ளவும்.

நன்றி.

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால்...

என் இனிய நண்பருக்கு,

நீங்கள் நினைப்பதைப்போல் நான் பெரிய ஆள் அல்ல. முஸ்லிம்களில் பெரும் பெரும் அறிஞர்கள் இருக்கிறார்கள். குர்ஆனைப் பற்றியும் நபிகளாரின் உபதேசங்கள் பற்றியும் அவர்களுக்கு விசாலமான அறிவு இருக்கிறது. அதிலிருந்து எனக்குக் கிடைத்த சில சொட்டு தேன்துளிகளையே உங்கள் நாவில் தடவிவிட்டேன். ஆரம்பத்திலும் முடிவிலும் எல்லா நன்றிக்கும் உரியவன் அல்லாஹ் தான். அவனே நமக்கு நேர்வழி காட்டினான். அவனே நமக்குத் தூதர்களை அனுப்பினான். அந்தத் தூதர்கள் விட்டுச் சென்ற கல்வியைச் சுமந்து வாழ்கிறார்கள் அறிஞர்கள். அவர்களிடமிருந்து என்னைப் போன்ற பாமரன் பெற்றுக்கொண்டதை எனது பாணியில் எழுதுகிறேன். அவ்வளவுதான்.

நேரடியாக விசயத்திற்கு வந்துவிடுகிறேன். உங்கள் நண்பரின் கேள்விகளும் உங்களின் கேள்விகளும் அவசியம் பதில் அளிக்கப்பட வேண்டியவை. முஸ்லிம் என்ற நிலையில் எனக்குப் பொறுப்பிருக்கிறது என்று நம்புகிறேன். என்னிடம் குர்ஆனும் நபிகளார் வழிகாட்டலும் இருக்கிறது. அதுதான் எல்லாரிடமும் இருக்க வேண்டியது என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது. இந்தக் கல்வியைப் பரப்புகிறவர்தாம் மக்களை நேர்வழியில் அழைக்க முடியும். இதனிடையே எழுகிற கேள்விகளுக்குப்

பதிலளித்துத் தெளிவைக் கொடுப்பது என்னைப் போன்றவரின் கடமை. ஏன், எனக்குத் தெரியாவிட்டால் கூட, நல்ல முஸ்லிம் அறிஞரிடம் கேட்டுத் தெரிந்தாவது உங்களுக்குச் சொல்ல நினைக்கிறேன்.

فَاسْأَلُوا أَهْلَ الذِّكْرِ إِنْ كُنْتُمْ لَا تَعْلَمُونَ

'உங்களுக்குத் தெரியாவிட்டால், அறிவுள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்' (குர்ஆன் 16:43)

என்று திருக்குர்ஆன் அறிவுத் தேடலை ஊக்குவிக்கிறது. நீங்கள் செய்துகொண்டிருப்பதும் அதைத்தான். உங்கள் நண்பரும் நீங்களும் நல்லதைச் செய்கிறீர்கள். நான் அதை மதிக்கிறேன். வரவேற்கிறேன்.

பகுத்தறிவின் எல்லை

முதலில் உங்கள் நண்பரின் கேள்விகளுக்கு வருகிறேன். அடிப்படையான கேள்விகளைக் கேட்டிருக்கிறார். கடவுளைப் பகுத்தறிந்து நம்புவதுபோல் தேவர்கள், தேவதைகள், பேய், பிசாசுகள், அமானுஷ்ய விசயங்கள், சொர்க்கம், நரகம் இந்த விசயங்களையும் ஆராய்ந்து உண்மை, பொய்யைக் கண்டறிய முடியுமா என்கிறார். அவர் புரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விசயம், பகுத்தறிவுக்கு எல்லை இருக்கிறது. அந்த எல்லையைத் தாண்டி எதையும் அது அறியாது. எல்லை என்ன? புலன்களால் அறிவது. கருவிகளால் அறிவது. உணர்வால் தீர்மானிப்பது.

நீங்கள் நெருப்பு சுடுமா என்பதைப் புலன்களாலும் கருவிகளாலும் உணர்வாலும் அறிகிறீர்கள். சுடும் என்று பகுத்தறிவுடன் தீர்மானிக்கிறீர்கள். நெருப்பைப் பார்க்கிறீர்கள். சுடுவதை உணர்கிறீர்கள். உண்மை புரிந்துவிடுகிறது. எல்லாமே பகுத்தறிவின் எல்லைக்குள் நடக்கிறது. ஆனால், நரகநெருப்பை நீங்களோ நானோ பார்த்ததில்லை. அதற்காக அதைஇல்லை என்று மறுப்பதும் பகுத்தறிவு இல்லை. ஏன்? நமது எல்லையைத் தாண்டிய விசயம் அது. உலக நெருப்பை அறிவதற்கு இப்போதிருக்கும் அறிவு போதுமானது. நம்முடைய ஆற்றலின் எல்லைக்குள் இது இருக்கிறது. நரக நெருப்போ இந்த நெருப்பைவிட பல மடங்கு உஷ்ணமானது. நம்முடைய ஆற்றலின் எல்லையைத் தாண்டியது. அதைப் புரிந்துகொள்ள இப்போதிருக்கும் அறிவு போதாது. நம்மால்

1. அல்லாஹ் மரியமைத் தேர்ந்தெடுத்தான். (3:42) எதற்கு? அற்புதத்தில் பிறக்கப்போகும் ஒரு குழந்தைக்குத் தாயாக.

2. மற்ற பெண்களைப் போலில்லாமல் அவர்களைப் பரிசுத்தமாக்கி வைத்தான். (3:42)

3. உலகப் பெண்கள் அனைவரையும்விட மேன்மையாக்கினான். (3:42)

4. எந்த ஆணுடைய தீண்டலுக்கும் ஆளாகாதபடி அவர்களைப் பாதுகாத்தான். (3:47)

5. தன்னுடைய 'ஆகு' எனும் வார்த்தையால் மர்யமைக் கர்ப்ப மாக்கினான். (3:45, 4:171)

6. இவற்றை வானவர்களின் மூலம் நற்செய்தியாகக் கூறி மகிழ்ச்சி யூட்டினான். (3:42–46)

7. மர்யமின்மீது அபாண்டமான அவதூறு கூறியவர்களை, தான் சபித்துவிட்டதாகவும் கூறியுள்ளான். (4:156) என்ன அவதூறு தெரிகிறதா? யூதர்கள் மர்யமைக் கற்பிழந்த பெண் என்றார்கள். அதனால் சபிக்கப்பட்டார்கள்.

இயேசுவின் சிறப்புகள் பற்றியும் குர்ஆன் தரும் குறிப்புகளை வரிசைப்படுத்துகிறேன்.

1. இயேசு இந்த உலகிலும் மறுமையிலும் மிக்க கண்ணியமுள் ளவர். (3:45)

2. அல்லாஹ்வுக்கு மிக நெருங்கியவர்களில் ஒருவர். (3:45)

3. நல்லொழுக்கம்கொண்டவர். (3:46)

4. மர்யமின் பரிசுத்தமான குமாரர். (19:19)

5. எங்கிருந்தபோதிலும் பாக்கியம் பெற்றவர். (19:31)

6. தாய்க்கு நன்றி செய்பவர். (19:32)

7. அவர் முரடர் இல்லை. (19:32)

8. வழி தவறியவர் இல்லை. (19:32)

9. அவரைப் பற்றி கேலியாகப் பேசி, சிரித்து, வீண் தர்க்கம் செய்த மக்களுக்கு, தகுந்த பதிலடியை அல்லாஹ் குர்ஆன் மூலம் வெளிப்படுத்தினான். (43:57-59)

இறைவனின் தோற்றம் குறித்து முஸ்லிம் அனுப்பிய மெயில் – 8

✿

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால்...

என் இனிய நண்பருக்கு,

நான் அல்லாஹ்விடம் உங்கள் இம்மை, மறுமை நல்வாழ்வுக்காகப் பிரார்த்தனை செய்து வருகிறேன். நீங்கள் நேர்வழியை ஏற்றுக் கொள்ள வேண்டும். என்னிடம் இறைநம்பிக்கை குறித்து நிறைய கற்று வருகிறீர்கள். கல்வி, நடைமுறைக்கு வந்தால் மட்டுமே நமக்குப் பலன் தரும். உண்மையான இறைவனைத் தெரிந்து கொண்டீர்கள். ஆனால், எந்தளவுக்கு நீங்கள் அவனை நெருங்கத் தொடங்கியிருக்கிறீர்கள் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள் என்ற நினைவூட்டலுடன் இந்த மெயிலை அனுப்புகிறேன். உங்கள் கேள்விகளுக்கு வரிசையாகப் பதில் கொடுத்துவிடுகிறேன்.

முதல் கேள்வி: அல்லாஹ்விற்கு உருவம் உண்டா?

இறைவன் எங்கும் நிறைந்தவன் என்ற அத்வைதக் கொள்கை பற்றி முந்திய கடிதத்தில் சொல்லியிருந்தேன் அல்லவா? அந்த வழிகேடான கொள்கை பரவியதற்கு முக்கியக் காரணமே இறை வனின் உருவத்தைப் பற்றிய சரியான அறிவு இல்லாதது. அடிப் படையான விசயத்தைச் சொல்லிவிடுகிறேன். அல்லாஹ்வின் தன்மைகள் என்று குர்ஆனும் நபிமொழிகளும் சொல்கிற அனைத் தையும் அப்படியே ஏற்றுக்கொள்வது நம்மீது கடமை. அல்லாஹ் வின் எந்தத் தன்மையையும் மறுப்பதோ, அதற்கு வேறு அர்த்தம் சொல்வதோ, அதைப் படைப்புகளுடன் ஒப்பிடுவதோ, அது எப் படி இருக்கும் என்று நம்முடைய அறிவுக்கு ஏற்ப வியாக்கியானம் கொடுப்பதோ கூடாது. இதை மறந்திடாமல் நீங்கள் குர்ஆனைப் படித்துப் பார்த்தால் தெரியும், அல்லாஹ்வின் உருவம் குறித்து

என்னென்ன தன்மைகளை அவன் நமக்குச் சொல்லியிருக்கிறான் என்பது.

குர்ஆனின் எந்த இடத்திலும் அல்லாஹ்வுக்கு உருவம் இல்லை என்று சொல்லப்படவில்லை. மாறாக, அல்லாஹ்வின் தன்மைகளில் அவனுக்கு முகம், இரு கைகள், இரு கண்கள் அவனுக்கு உண்டு என்கிறது. ஆனால், அவனுடைய முகத்தையோ கைகளையோ கண்களையோ நம்மால் கற்பனை செய்ய முடியாது. நமக்கோ மற்ற படைப்புகளுக்கோ இருப்பது போல்தான் அவனுடையதும் என்று ஒப்பிடக் கூடாது. இதெல்லாம் அவனுடைய உள்ளமையின் தன்மைகள். அப்படியே நம்புவதுதான் நம் கடமை. நான் சில குர்ஆன் வசனங்களைக் கொடுக்கிறேன்.

وَلِلَّهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ فَأَيْنَمَا تُوَلُّوا فَثَمَّ وَجْهُ اللَّهِ إِنَّ اللَّهَ وَاسِعٌ عَلِيمٌ

கிழக்குத் திசையும் மேற்குத் திசையும் அல்லாஹ்வுக்கே சொந்தம். நீங்கள் எத்திசையை நோக்கினாலும் அங்கே அல்லாஹ்வின் (சங்கையான) முகம் இருக்கிறது. நிச்சயமாக அல்லாஹ் விசால மானவன்; மிக அறிந்தவன். (குர்ஆன் 2:115)

وَيَبْقَى وَجْهُ رَبِّكَ ذُو الْجَلَالِ وَالْإِكْرَامِ

மிக கண்ணியமும் பெருமையும் தங்கிய உங்கள் இறைவனின் முகம் மட்டும் நிலைத்திருக்கும். (குர்ஆன் 55:27)

وَمَا قَدَرُوا اللَّهَ حَقَّ قَدْرِهِ وَالْأَرْضُ جَمِيعًا قَبْضَتُهُ يَوْمَ الْقِيَامَةِ وَالسَّمَاوَاتُ مَطْوِيَّاتٌ بِيَمِينِهِ سُبْحَانَهُ وَتَعَالَى عَمَّا يُشْرِكُونَ

(நபியே!) அல்லாஹ்வின் (மேலான) தகுதிக்குத் தக்கவாறு அவனை அவர்கள் கண்ணியப்படுத்துவதில்லை. பூமி (இவ்வளவு பெரிதாக இருந்தபோதிலும் அது) முழுவதும் மறுமையில் அவனுடைய ஒரு கை பிடியிலும், வானங்கள் அனைத்தும் சுருட்டப்பட்டு அவனுடைய வலது கையிலும் இருக்கும். இவர் கள் இணை வைப்பதை விட்டு அவன் மிக மேலானவன்; அவன் மிக பரிசுத்தமானவன். (குர்ஆன் 39:67)

وَاصْبِرْ لِحُكْمِ رَبِّكَ فَإِنَّكَ بِأَعْيُنِنَا وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ حِينَ تَقُومُ

(நபியே!) உங்கள் இறைவனின் தீர்ப்பைப் பொறுமையாக எதிர்பார்த்திருங்கள். நிச்சயமாக நீங்கள் நம் கண்களுக்கு முன் பாகவே இருக்கின்றீர்கள். (குர்ஆன் 52:48)